# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● செப்டம்பர் 30, 2017 Weekly E-paper ● September 30, 2017

# தமிழக வெளிச்சம்



# மிகப் பழையது!

● சுப.வீரபாண்டியன்

கடந்த 25 ஆம் தேதி, இந்தியப் பிரதமர் மோடி, 'சௌபாக்கியா யோஜனா' என்னும் மின்னொளித் திட்டத்தை அறிவித்தார். 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இந்தியா முழுவதும் எல்லா கிராமங்களிலும் மின் இணைப்பைக் கொடுப்பதாகத் திட்டம்.

இத்திட்டத்தை செப் 25 ஆம் தேதி அறிவித்ததற்கும் ஒரு காரணம் உண்டு. அது தீனதயாள் உபாத்தியாயாவின் பிறந்த நாள். 1916 செப் 25 அன்று உ.பி.யில் பிறந்தவர் அவர். 20 வயதிலேயே ஆர்.எஸ். எஸ். இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். 1967–68 இல் அவ்வியக்கத்தின் தலைவராகவும் இருந்தவர். அதாவது அவர்கள் கட்சியில் அவர் ஒரு தலைவர். அவ்வளவுதான். ஆனால் அவரை நாட்டின் தலைவர் போல ஆக்கி, அவர் பிறந்தநாளில் புதிய திட்டத்தை அறிவித்துள்ளார் பிரதமர்.



இந்த அறிவிப்பைப் பார்த்தவுடன், இது தமிழகத்திற்கு மிகவும் பழையது என்பதைச் சுட்டிக்காட்டி என் கீச்சகத்தில் (ட்விட்டர்) ஒரு பதிவை நான் ஏற்றினேன். 1976ஆம் ஆண்டு மார்ச் மாதமே, தமிழகத்தில் 99.2% மின் இணைப்பு கொடுக்கப்பட்டு விட்டது என்னும் செய்தியைப் பதிவு செய்தேன்.

உடனே காவிப் படைகள் வெகுண்டெழுந்து நான் பச்சைப் பொய் சொல்வதாக மறு பதிவு இட்டன. அவற்றுள் மிகச் சில மட்டுமே சற்று நாகரிகமான பதிவுகள் என்று சொல்ல வேண்டும். ஆபாசம், வன்முறை ஆகிய இரண்டு மட்டுமே அவர்களின் பதிவுகளில் எப்போதும் தலைதூக்கி நிற்கும். அவர்களுக்காக அன்றி, பொதுவான மக்களுக்கு உண்மை தெரிய வேண்டும் என்பதற்காகச் சில சான்றுகளை இங்கே தந்துள்ளேன்.

1976இல் நூறு விழுக்காடு மின் இணைப்பு பெற்ற மாநிலமாக ஹரியானா மட்டுமே இருந்தது. இரண்டாம் இடத்தில் இருந்தது தமிழ்நாடு. அடுத்து கேரளா. 1980களின் தொடக்கத்தில், ஹரியானா, பஞ்சாப், தமிழகம், கேரளா ஆகிய நான்கு

*Development of Rural Electrification* 105

TABLE 3.2
**Per cent of Rural Population Covered by Electrification**
**(As on 31st March)**

| *Sl. No.* | *States* | *1976* | *1978* | *1979* | *1980* |
|---|---|---|---|---|---|
| 1. | Andhra Pradesh | 68.4 | 81.1 | 83.5 | 83.9 |
| 2. | Assam | 14.4 | 20.7 | 22.8 | 27.3 |
| 3. | Bihar | 41.7 | 44.0 | 44.3 | 44.3 |
| 4. | Gujarat | 56.7 | 65.7 | 71.4 | 76.6 |
| 5. | Haryana | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| 6. | Himachal Pradesh | 54.7 | 60.6 | 66.9 | 68.7 |
| 7. | Karnataka | 69.7 | 72.8 | 74.6 | 76.1 |
| 8. | Jammu and Kashmir | 28.9 | 60.6 | 66.9 | 68.7 |
| 9. | Kerala | 96.7 | 97.9 | 99.1 | 100.0 |
| 10. | Madhya Pradesh | 32.0 | 40.6 | 44.6 | 50.0 |
| 11. | Maharashtra | 72.6 | 78.5 | 82.5 | 86.1 |
| 12. | Meghalaya | 12.3 | 20.9 | 24.5 | 27.4 |
| 13. | Nagaland | 34.9 | 41.9 | 44.9 | 50.8 |
| 14. | Orissa | 43.0 | 50.9 | 54.6 | 55.5 |
| 15. | Punjab | 84.5 | 100.0 | 100.0 | 100.0 |
| 16. | Rajasthan | 36.8 | 46.8 | 53.4 | 57.9 |
| 17. | Tamil Nadu | 99.2 | 99.7 | 99.7 | 99.7 |
| 18. | Uttar Pradesh | 39.7 | 40.7 | 41.9 | 42.7 |
| 19. | West Bengal | 42.0 | 48.0 | 49.6 | 51.3 |
| | States covered | 54.5 | 59.9 | 62.1 | 64.1 |
| | All India | 54.4 | 59.8 | 62.1 | 64.1 |

*Source*: Central Electricity Authority Quoted in—"Evaluation of Rural Electrification Programme, Vol. I. (Organization, Growth and Coverage), P.E.O. Government of India, Planning Commission, New Delhi 1982.

மாநிலங்களும் 100% மின் இணைப்பைப் பெற்றன. இதுதான் உண்மைச் செய்தி!

எப்போதோ தமிழகம் நம் தலைவர் கலைஞர் ஆட்சியில் செய்து முடித்தவைகளை, இப்போது தன் சாதனைத் திட்டமாக வெளியிட்டுக் கொண்டுள்ளது மோடி அரசு. ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## பேசக் கற்றுக்கொள்ளுங்கள்

“**யா**காவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு” இப்படி நயமாகச் சொல்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

உலகத்தில் பயங்கரமான ஆயுதம், நிலை கெட்டுப்போன நயவஞ்சகரின் நாக்கு என்று கோபமாக அடையாளம் காட்டுகிறார் பட்டுக்கோட்டையார்.

தமிழகத்தின் அம்மா ஜெயலலிதாவாம். இந்தியாவின் அம்மா மோடியாம்.

தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராசனின் நாவன்மையில் விழுந்த ‘பொன்மொழி’ இது.

ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமை கூடத் தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறார் இவர்.

கீழடி அகழ்வாராய்ச்சி குறித்து, மத்திய அரசுக்கு எதிராக அவதூறுகளைச் சொல்லி வருகிறாராம் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் - சொல்கிறார் தமிழிசை.

அது அவதூறு இல்லை, உண்மை!

பா.ஜ.க.வைத் தவிர அனைத்துக் கட்சித் தலைவர்கள், அறிஞர் பெருமக்கள், தொல்லியல் விற்பனர்கள், மக்கள் என எல்லோரும்தான் கீழடிக்காக மத்திய அரசைக் கண்டித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

சிந்து சமவெளி நாகரிகத்தைப் பார்ப்பன நாகரிகமாகக் காட்டப் பல பொய்களைச் சொன்னார்கள் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வினர்.

இல்லாத சரஸ்சுவதி நதியை இருப்பதாக நா கூசாமல் பொய் சொல்கிறார்கள்.

வால்மீகியே சொல்லாத இராமன் பாலத்தை இருப்பதாகச் சொன்ன இவர்களின் பொய்யை நாசா ஆய்வுப் படம் தகர்த்தெறிந்தது.

ஆனாலும் பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் அது உண்மையாகிவிடும் என்று கோயபல்ஸ் பின்னால் நிற்கிறார்கள்.

“பொய்” - அது நமக்குத் தொழில் என்பது பா.ஜ.க.விற்குப் பொருந்தும். ஊடக விவாதங்களில் பா.ஜ.க.வினரிடம் இதைப் பார்க்கலாம்.

கருப்புப் பணத்தைப் பிடுங்கி ஆளுக்கு 15 லட்சம் தருகிறேன் என்றும், நாட்டை முன்னேற்றப் போகிறேன் என்றும் சொன்ன மோடியின் பொய் இதுவரை நின்றபாடில்லை.

பொய் சொன்ன வாய்க்கு போசனம் கிடைக்காது என்பார்கள் மக்கள்.

உண்மை பேசாவிட்டாலும் பரவாயில்லை.

இனியாவது ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க.வினர் (மற்றவர்களை தூற்றிப்) பொய் பேசாமல் இருப்பது நல்லது.

முதலில் இனிமையாகப் ‘பேசுவதற்குக்’ கற்றுக்கொள்ள வேண்டும்.

## குன்றத்தூர் கருத்தரங்கம்



**கா**ஞ்சி வடக்கு மாவட்டம் குன்றத்தூரில் 28.9.2017 அன்று மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. கருத்தரங்கில் தோழர் சுப.வீரபாண்டியன் உரையாற்றுகிறார். கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன், முனைவர் சபாபதி மோகன் ஆகியோரும் கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றினர்.

## தஞ்சையில் நூல் வெளியீடு




**24.09.2017** அன்று தஞ்சையில் லோகநாதன் எழுதிய ‘அறிவோம் ஜோதிடம்’ நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. சோதிடத்தை ஏற்றுச் சோதிடர் செல்வீயும், மறுத்துத் தோழர் சுபவீயும் உரையாற்றினர். முனைவர் தெய்வநாயகம் தலைமையில் நடைபெற்ற விழாவில் பேராசிரியர் மா.பா.குருசாமி, கவிச்சுடர் கவிதைப் பித்தன் உள்ளிட்டோர் உரையாற்றினர். இராம. சந்திரசேகர் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்து இருந்தார்.

## ஆலங்குடிப் பொதுக்கூட்டம்



**26.09.2017** அன்று புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் மாவட்டச் செயலாளர் இரகுபதி தலைமையில் நடைபெற்ற தி.மு.க. பொதுக் கூட்டத்தில் தோழர் சுப.வீரபாண்டியன், கவிச்சுடர் கவிதைப் பித்தன், சட்டமன்ற உறுப்பினர் மெய்யநாதன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

## சென்னை – முப்பெரும் விழா




**27.09.2017**இல் மாவட்டச் செயலாளர் சேகர் பாபு ஏற்பாட்டில், சென்னை, பாடியில் நடைபெற்ற தி.மு.க. முப்பெரும் விழாவில் தோழர் சுபவீ, தமிழச்சி தங்கபாண்டியன், மனுஷ்ய புத்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

## அடுக்குமொழி அண்ணாதுரை!



பேரறிஞர் அண்ணா அவர்களை, ஒருகாலத்தில் மக்கள் 'அடுக்குமொழி அண்ணாதுரை' என்று அழைத்தனர். அவர் வெறும் அடுக்குமொழிக்குச் சொந்தக்காரர் மட்டுமில்லை, சமூக அடுக்குகளைச் சாய்க்க வந்த சமூகப் போராளியும் கூட என்பதைப் பிறகு நாடு புரிந்துகொண்டது.

(27.09.17 அன்று சென்னை பாடியில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்கூட்டத்தில் சுபவீ)

## பாவம் சிவாஜி!



நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபத் திறப்பு விழாவிற்கு (அக்.1) ஓர் அமைச்சர்தான் வருகிறாராம். வட்டச் செயலாளர் யாரும் கிடைக்கவில்லை போலிருக்கிறது!

(ட்விட்டரில் சுபவீ)

## குதிரை பேர அரசும், குதிரை தேடும் அரசும்!



நாட்டின் அரசியலை எதிர்கொள்ள நமக்கு இன்று பெரியாரின் துணிவு தேவைப்படுகிறது. அந்தத் துணிவும் இருவகைப்பட்டது. ஒன்று, தமிழக ஆளுங்கட்சியின் இன்றைய அரசியல் கூத்தைச் சகித்துக் கொள்ளும் துணிவு. இன்னொன்று, நம்மை நோக்கி வந்துகொண்டுள்ள காவி ஆபத்தைச் சந்தித்து வீழ்த்தும் துணிவு!

இங்கே உள்ள அரசு, குதிரை பேர அரசு என்பார் நம் தளபதி. அங்கே உள்ள அரசோ, இங்கே ஆட்சி அமைப்பதற்குப் பெரிய நடிகர் யாரேனும் கிடைக்க மாட்டார்களா என்று தேடிக் கொண்டிருக்கிறது. ஆம், இது குதிரை பேர அரசு, அது குதிரை தேடும் அரசு!

– குன்றத்தூர் போதுக் கூட்டத்தில் சுபவீ.

---

சென்ற இதழ்த் தொடர்ச்சி...

# நாகாலாந்து நடந்ததும் நடப்பதும்.

● உதயகுமார்

1953 இல் இந்தியப் பிரதமர் நேருவும், மியான்மரின் பிரதமர் யூபனாவும் நாகாலாந்தின் சில பகுதிகளுக்குப் பயணம் செய்தனர். அப்போது NNC பிரதிநிதிகள் "நாகாலாந்தைப் பிரிக்கக் கூடாது" என்ற கோரிக்கையை முன்வைத்து மனு அளிக்க முயன்றனர். ஆனால் இரு பிரதமர்களும் அம்மனுவை வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டனர். இதனால் நாகா மக்கள் இருபிரதமர்களின் வருகையையும் புறக்கணித்தனர். 12,000 பேர் கூட வேண்டிய விளையாட்டுத் திடலில் ஒரு சில அரசு அதிகாரிகளைத் தவிர வேறு யாரும் இல்லை.

இந்தப் புறக்கணிப்பிற்குப் பிறகும் இரு நாட்டுப் பிரதமர்களும் நாகாலாந்தை இரண்டாகப் பிரித்தனர். நாகாலாந்தின் பெரும்பகுதி மியான்மருக்குச் சென்றது. இந்தியாவில் மணிப்பூர், அசாம் மற்றும் அருணாச்சல் பிரதேஷ் ஆகிய மாநிலங்கள் நாகாலாந்தில் இருந்தது.

இந்திய அரசு NNC தலைவர்களைத் தொடர்ந்து கண்காணிக்கவும், பின் தொடரவும், கைது செய்யவும் துணை இராணுவப்படையை அனுப்பியிருந்தது. 1958 இல் நாகாலாந்து மக்களுக்கு எதிராக இந்திய அரசு Armed Forces Special Power Act, ஆயுதப் படைச் சிறப்பு அதிகாரங்கள் சட்டம் இயற்றியது. மூன்று பேருக்கு ஒரு இராணுவ வீரர் என்ற விகிதத்தில் இராணுவம் குவிக்கப்பட்டது. பின்னர் துணை இராணுவப் படையின் அட்டூழியம் அதிகமானது. பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். ஆண்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். பலர்கொல்லப்பட்டனர். இதனால் வேறு வழியின்றி, இதுவரை மனுக்கள் மட்டும் அளித்து வந்த NNC தலைவர்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டியிருந்தது. நாகாலாந்தில் வன்முறை தொடங்கியது. நாகா இனத்தை முற்றிலுமாக ஒழித்துவிடும் எண்ணத்தோடு துணை இராணுவம் செயல்பட்டது.

Article 371A:

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வன் முறைக்குத்தீர்வு காணவிரும்பிய சில படித்த நாகா மக்கள் 'Naga People's Convention' (NPC) என்ற ஒரு அமைப்பை உருவாக்கி இந்திய அரசிற்கும், NNCக்கும் இடையே அமைதிப் பேச்சு வார்த்தை நடத்தியது. 1960இல் NPC இந்திய அரசுடன் 16 அம்ச ஒப்பந்தம் ஒன்றைக் கையொப்பமிட்டது. இதன் படி நாகாலாந்து தனி மாநிலமாக உருவாக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் இரண்டாவது அம்சத்தின் படி நாகாலாந்து இந்திய வெளியுறவுத் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

வருமான வரிவிலக்கு போன்ற அம்சங்களும் இதில் அடங்கும். இந்த 16 அம்ச ஒப்பந்தம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டு 'Article 371A' உருவாக்கப்பட்டது.

ஆனால் 1973ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் தன்னிச்சையாக வெளியுறவுத் துறை அமைச்சகத்திற்குக் கீழ் இருந்த நாகாலாந்தை உள்துறை அமைச்சகத்திற்குக் கீழ் கொண்டு வந்தது. நாகாலாந்து சட்டமன்றத்தில், மீண்டும் வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்குக் கீழ் கொண்டு வரவேண்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1975இல் இந்திய அரசிற்கும் NNCக்கும் இடையே ஷில்லாங்கில் ஒரு உடன் படிக்கை கையெழுத்தானது. இதில் பலர்அதிருப்தி அடைந்தனர். அதனால் NNC ஒன்பது குழுக்களாக உடைந்தது. 1980இல் NSC-IN என்கிற வலுவான அமைப்பு உருவாகியது. இவ்வமைப்பை இந்திய அரசு அங்கீகரித்து பேச்சு வார்த்தை நடத்தியது. இப்படிப் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

2012இல் நாகாலாந்தின் 60 சட்ட மன்ற உறுப்பினர்களும், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்கும், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அவர்களுக்கும் பதவி விலகல் கடிதத்தை அனுப்பினர். பல ஆண்டுகளாக போராடிவரும் தங்களுக்குத் தீர்வு வேண்டி இந்நடவடிக்கையை மேற்கொண்டனர். அதன் அடிப்படையில் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. காங்கிரஸ் அரசைத் தொடர்ந்து பா.ஜ.க அரசிலும் இப் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. அந்த வகையில் 2015 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 அன்று முதல் சட்டகம் (Framework 1) உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன் அம்சங்கள் மிகவும் இரகசியமாகப் பேணப்பட்டு வருகிறது.



இதை போல் மியான்மரிலும் 1988 இல் NSC-IM என்ற அமைப்பு உருவானது. 2012 ஆம் ஆண்டு மியான்மர் அரசிற்கும் NSC-IM அமைப்பிற்கும் இடையே 6 அம்சங்கள் கொண்ட ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறது. 70 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் தங்கள் உரிமைப் போராட்டங்களில் இது வரை இரண்டு லட்சத்திற்கும் அதிகமான உயிர்களை நாகா மக்கள் இழந்திருக்கின் றனர். தொடர்ந்து நம்பிக்கையோடு உரிமை மீட்பிற்காகத் தளராது குரல் எழுப்பி வருகிறார்கள்.

நிறைவாக கேள்வி பதில் அமர்வில், நாகா மக்கள் போராட்டத்தின் விழுமியமாக எது இருக்கிறது என்ற கேள்வி கேட்கப்பட்டது. அதற்குத் திரு.வபாங் தோஷி அளித்த பதில் – மனிதநேயம்! ●




# நீதானா என்னை அழைத்தது

truecaller
Caller ID & Dialer

● சிவதி

நீதானா என்னை அழைத்தது
நீதானா என்னை நினைத்தது
நீதானா எந்தன் இதயத்திலே நிலைதடுமாறி உலவியது...

பத்து ஆண்டுகளுக்கு முன்பு...

மேசை மீது வைத்த பழைய தொலைபேசி ஒலிக்கிறது. பையன் தொலைபேசியை எடுக்கிறான். மறுமுனையில் இருந்து கடன்காரர், அழைக்கிறார். அப்பா தன் மகனிடம், தான் இல்லை என்று சொல்லச் சொல்லி மகனிடம் சைகை காண்பிக்கிறார். உடனே கடன்காரனுக்கு மகன் பதில் சொல்லுகிறான். 'அப்பா வீட்டில் இல்லை என்று சொல்லச் சொன்னார்' என்று, மிகச்சுருக்கமாக அப்பாவின் கதையை முடிக்கிறார் மகன்.

இப்படியாக, ஒரு காலத்தில் அழைப்பவர் யாரெனத்தெரியாமல், பதில் எது சொல்ல வேண்டுமெனத் தெரியாமல் விழி பிதுங்கி நின்ற காலம் உண்டு. இப்போது உலகம் சுருங்கிவிட்டது. எல்லோரும் அருகருகே வந்துவிட்டோம். பிக் பாஸ் நிகழ்ச்சி போல யாரும் ஒடவும் முடியாது ஒளியவும் முடியாது. நீங்கள் செல்லுமிடமெல்லாம் தொழில் நுட்பம் பூதக் கண்ணாடியில் உங்களைக் கண்காணித்துக் கொண்டே வருகிறது.

எல்லோரின் கைகளிலும் இப்போது திறன் பேசி இருக்கிறது. எல்லோருடைய எண்ணையும் நீங்கள் சேமித்து வைப்பதும் சாத்தியமில்லை. அப்படியே சேமித்து வைத்திருந்தாலும் இப்போது தொலைத்தொடர்பு திட்டத்திற்குத் தகுந்தாற் போல் நாளுக்கு ஒரு தொடர்பு எண் மாற்றிக்கொண்டே இருக்கிறார்கள். என்ன செய்வது. கவலையினை விடுங்கள் உங்கள் திறன் பேசியில் True Software Scandinavia AB ¡ True Caller App நிறுவிக்கொள்ளுங்கள். இனி நீதானா என்னை அழைத்தது, நீதானா என்னை அழைத்தது என்று கண்டசாலாவின் பாடலைப் போன்று மிக எளிதாக யார் உங்களை அழைத்தது என்று பார்த்துக் கொள்ளலாம்.

இந்தச் செயிலினை நிறுவிய உடன் உங்களது எண்ணையும் உங்களைப்பற்றிய விவரங்களையும் இது கோரும். உங்களின் எண்ணை மெய்ப்பு பார்த்து உறுதி செய்தவுடன் செயல்படத் தொடங்கிவிடும். நீங்கள் விரும்பினால் உங்கள் நிழற்படம் மற்றும் மின்னஞ்சலினைத் தரலாம். இனி உங்களுக்கு வரும் அழைப்பு அனைத்தையும் உங்கள் போனில் பதிவு இல்லை என்றாலும் கூட அழைப்பவர் யார் என்பதை இந்தச் செயலி உங்களுக்கு அறிவித்துவிடும். அவர் வங்கித்துறை சார்ந்தவரா, நீதித்துறை சார்ந்தவரா, பத்திரிகைத்துறை சார்ந்தவரா மருத்துவத்துறை சார்ந்தவரா என்பதைப் புட்டு புட்டு வைத்துவிடும்.

வேண்டப்படாத அழைப்பு

முதன்மையான பணியில் நாம் பரபரப்பாக இயங்கிக் கொண்டு இருப்போம். அப்போது கடன் அட்டை வாங்கிக்கொள்ளுங்கள், இந்தப் பாடலை உங்கள் டயலர் டோனாக வைத்துக்கொள்ளுங்கள், உங்கள் மொபைல் எண்ணுக்கு அதிர்ஷ்டப் பரிசு விழுந்திருக்கிறது என்ற தேவையற்ற அழைப்புகள் வரும். அவை யாவையும் இந்தச் செயல் தடுத்து நிறுத்தி உங்களுக்கு அழைப்பொலி வராமலே செய்துவிடும். ஒரு மிகப்பெரிய இன்னலில் இருந்து உங்களை இந்தச் செயலி காப்பாற்றும். அது மட்டுமன்றிச் சில குறிப்பிட்ட நபர் அழைப்பில் இருந்து தப்பவும் இந்தச் செயலி உதவும். எந்த எண்ணில் இருந்து உங்களுக்கு அழைப்பு வர வேண்டாம் எனக் கருதுகிறீர்களோ அந்த எண்ணைப் பதிவு செய்து Block List பதிந்துவிட்டால் போதும். எப்போதும் அவர்களது அழைப்பு நமக்கு எட்டவே எட்டாது. அவர் நமக்கு எப்போது அழைத்தாலும் அவருக்கு Busy Tone சென்றுவிடும். நீங்கள் உங்கள் பணியினைத் தங்கு தடையின்றிப் பார்த்துக்கொள்ளலாம்.

பெயர் பட்டியலினை எளிதில் சேமிக்கலாம்

நமக்கு வரும் அழைப்பு யாரெனத் தெரியப்படுத்துவதுடன் அவர்களது பெயரின் தொடர்பு எண் உங்களுக்குத் தேவையெனில் நீங்கள் Add விசையின் மூலம் உங்கள் தொலைபேசியில் பதிந்து வைத்துக்கொள்ள முடியும். ஏற்கனவே அவர்களிடம் உள்ள தரவுகள் மூலம் அவர் எந்தத் துறையினைச் சார்ந்தவர் என்ற விவரங்களையும் எளிதில் பெற முடியும்.

உங்களைத்தேடியது யார்?

இந்த ட்ரூ காலர் செயலியினைத் தரவிறக்கம் செய்யும் போது நீங்கள் மற்றொன்றையும் தெரிந்து கொள்ளலாம். உங்கள் பெயரை யாராவது தேடியிருக்கிறார்களா? என்பதை அறிந்து கொள்ளலாம். யாரால் எத்தனை முறை தேடப்பட்டு இருக்கிறீர்கள் என்பதை உங்கள மின்னஞ்சல் தகவல்கள் வழியே அறிந்து கொள்ள இயலும். ஒரு சிறிய தொகையினை ஆண்டுக் கட்டணமாகச் செலுத்தினால் பல கூடுதல் வசதியை இந்தச் செயலியில் இருந்து நாம் பெற முடியும். மேம்படுத்தப்பட்ட செயலி வழியே ஒரு பிரபலமானவரின் பெயிரினை வைத்து அவரது முகவரியினையும், எண்களைச் சட்டென அறிய முடியும்.

உங்களுக்கோ அல்லது உங்கள் நண்பருக்கோ பெயர் தெரியாதோரிடமிருந்து அழைப்பு வருகிறது எனில் இந்தச் செயலியில் அந்த எண்ணைத் தட்டச்சு செய்து அழைத்தவர் யாரென அறிந்து கொள்ள முடியும். இவர்கள் உலகின் முன்னூறு கோடி எண்களின் விவரங்களைத் தங்கள் வசம் வைத்துள்ளனர். எனவே தேவையான விவரங்களைக் கொக்கிபோட்டு எளிதில் பிடித்து விடலாம்.

படம் பிடியுங்கள் டயல் செய்யுங்கள்

நீங்கள் அழைக்க வேண்டிய எண்ணை இந்தச் செயலி வழியே படம் பிடித்தால் போதும் உடனே அந்த எண் டயல் செய்யுமாறு மாறிவிடும் உடனே, அவர்கள் எண்ணை நீங்கள் அழைக்கலாம். இதனால் ஒரு எண்ணை எடுத்து எழுதி அதனை ஒவ்வோர் எண்ணாக அழுத்தி நீங்கள் டயல் செய்ய வேண்டிய நேரம் குறைகிறது. தமிழ் இயங்குதளத்திலும் இந்தச் செயலி கிடைக்கிறது. நீங்கள் விரும்பும் வண்ணப் பின் திரையை (Background Themes) மாற்றி வைத்துக்கொள்ளலாம். தவறிய அழைப்புகளை நினைவு படுத்துதல் ஆகிய வசதிகள் உள்ளன.

பணப் பரிவர்த்தனை

தெரிந்தவர்களுக்கு UPI குறியீட்டு எண்ணுடன் பணம் அனுப்பும் வசதியையும் இப்போது அறிமுகம் செய்துள்ளனர். எங்காவது உங்கள வங்கிக்கணக்கிலிருந்து தொகை செலுத்த வேண்டுமானால் மொபைல் காமராவின் மூலம் Scan செய்தோ அல்லது அவர்களின் வங்கிக்குறியீடுகளின் வழியே தொகையினை எளிதில் பணப் பரிமாற்றம் செய்யலாம். எண்ணற்ற வசதிகள் இந்த செயலியில் உள்ளன. நமது எண்களை யாரெல்லெம் தேடினால் கிடைக்க வேண்டும் என்று குறியிடுகிறீர்களோ அவர்கள் மட்டுமே தேடிப்பெற முடியும்.

தனியுரிமை மற்றும் பாதுகாப்பு

கட்டணத்தைச் செலுத்தினால் எந்தப் பிரபலத்தின் எண்ணையும் நம்மால் பெற்று விட முடிகிறது என்கிற போது நமது எண்களையும் பிறர் கட்டணத்தைச் செலுத்திப் பெற்று விட முடியும் என்பது உண்மையாகிறது. எஸ்எம்எஸ் என்ற கூடுதல் வசதிகள் இவர்கள் அளித்தாலும் இடையே வரும் விளம்பரங்கள் சில நேரங்களில் அலுப்பூட்டுகின்றன.

இனிப் பேசுவது கிளியா இல்லை பெண்ணரசி மொழியா
கோவில் கொண்ட சிலையா
கொத்து மலர்க் கொடியா? என்றெல்லாம் கேட்க வேண்டியதில்லை. True Caller App இருந்தால் எதுவும் தெரிந்துவிடும்.

**செயலியினை நிறுவ இந்த இணைப்புக்குச் செல்லுங்கள்**

https://play.google.com/store/apps/dev?id=5383913004303935162

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.